பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
11 07 2026 SATURDAY 12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- இந்தியா - நியூஸிலாந்து இடையேயான வர்த்தகத்தை 35 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.
- உலக மக்கள் தொகை தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.
- வெனிசுலா நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 4 ஆயிரத்து 118-ஆக அதிகரித்துள்ளது.
- இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 5வது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

>>>>>>>><<<<<<<

இந்தியா - நியூஸிலாந்து இடையேயான வர்த்தகத்தை 35 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நியூஸிலாந்து பிரதமர் திரு. Christopher Luxon இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைக்கு பின்னர் வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையில், இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்தை அடுத்த ஐந்தாண்டுகளில் இரட்டிப்பாக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்காசியாவில் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்று இதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வளைகுடா பகுதியில் பொதுமக்களை பாதுகாக்கும் வகையில், பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்றும், Hormuz நீரிணைப் பகுதியில் தடையின்றி வர்த்தக கப்பல்கள் செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும் அந்த கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச சட்டத்திற்கு உட்பட்டு, அமைதி பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் அதில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் விரிவாக்கப்பட்டு, கூடுதல் உறுப்பு நாடுகளை சேர்க்க வேண்டும் என்றும் இருதலைவர்கள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

விசாகப்பட்டினம் கடற்பகுதியில், ஐஎன்எஸ் மகேந்திரகிரி போர்க்கப்பலை இந்திய கடற்படையுடன் இணைக்கும் நிகழ்ச்சியில் பேசிய அவர். ராணுவத் தளவாடங்கள் உள்நாட்டிலேயே தயாரிக்க முன்னுரிமை அளிக்கப்படுவதாக கூறினார்.

செயற்கை நுண்ணறிவு போன்ற நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்திய போதிலும், ராணுவ வீரர்களின் தைரியம் மற்றும் ஆற்றல் மூலம் மட்டுமே வெற்றிபெற முடியும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

சுயசார்பு இந்தியா திட்டத்தின் கீழ், ராணுவ தளவாடங்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக அவர் கூறினார்.

ஐஎன்எஸ் மகேந்திரகிரி போர்க்கப்பலை இந்திய கடற்படையுடன் இணைப்பதன் மூலம், நமது கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்த முடியும் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளில் ஆறு நவீன போர்க்கப்பல்கள் இந்திய கடற்படையுடன் இணைக்கப்பட்டது, நமது நாட்டின் வலிமையை பறைசாற்றுவதாக திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

>>>>>>><<<<<<<

உலக மக்கள் தொகை தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

மக்கள் தொகை தொடர்ந்து அதிகரித்து வருவதால் ஏற்படும் சவால்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.

1990ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், ஐ.நா பொதுச்சபையில் மக்கள்தொகை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், ஒவ்வோராண்டும் □லை 11ஆம் தேதி உலக மக்கள் தொகை தினமாக கடைபிடிக்க முடிவெடுக்கப்பட்டது.

இந்த தினத்தையொட்டி தமிழகம் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் விழிப்புணர்வு பேரணி உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

உலக மக்கள்தொகை தினத்தின் முக்கியத்துவம் குறித்து சென்னை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி இணைப் பேராசிரியர் டாக்டர் சுகந்தி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மருத்துவர் 43 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

பிரிக்ஸ் அமைப்பின் போக்குவரத்து துறை அமைச்சர்கள் மாநாடு மத்திய சாலை போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. நிதின்கட்கரி தலைமையில், மஹாராஷ்ட்ர மாநிலம், நாக்பூரில் இன்று நடைபெறுகிறது.

நிலையான வளர்ச்சியை உருவாக்குவது என்ற கருப்பொருளின் அடிப்படையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில், உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

போக்குவரத்து துறையில் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பு குறித்து இதில் முக்கியமாக விவாதிக்கப்படவுள்ளது.

>>>>>>><<<<<<<

சுதந்திர போராட்ட வீரர் அழகு முத்து கோன் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஆங்கிலேய ஆதிக்கத்தை ஆரம்ப காலத்திலேயே துணிச்சலுடன் எதிர்த்து, தாய்நாட்டின் சுதந்திரத்திற்கும், சுயமரியாதைக்கும் போராடிய முன்னோடி வீரர் அழகு முத்து கோன் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்த தினத்தை ஒட்டி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் மாவீரன் அழகு முத்து கோன் போன்ற முன்னோர்களின் வீர வரலாறுகளை இளைய தலைமுறையினருக்கு எடுத்துக் செல்வோம் என்று தெரிவித்துள்ளார்.

அடிமை வாழ்வைவிட சுதந்திரமே உயர்ந்தது என்பதை தனது சொல்லாலும், செயலாலும் உணர்த்தியவர் வீரன் அழகுமுத்துக்கோன் என்று தமிழக முதலமைச்சர் திரு. வி□ய் புகழாரம் சூட்டியுள்ளார்.

>>>>>>><<<<<<<

இந்தியாவிலேயே மிக வளமான மாநிலமாக சிக்கிம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2024-25 ஆம் ஆண்டுக்கான வருவாய் ஆய்வறிக்கையில் சிக்கிம் மாநிலத்தின் தனிநபர் வருமானம் 6 லட்சத்து 46 ஆயிரம் ரூபாய் என்று கூறப்பட்டுள்ளது.

இது, தேசிய சராசரியை விட 3 மடங்கு அதிகம் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*தனிநபர் வருமான வரிசையில் சிக்கிமிற்கு பிறகு, கோவா, சண்டிகர், தில்லி ஆகியவை இடம்பிடித்துள்ளன.*

*>>>>>>><<<<<<<*

*கேரள மாநிலம், வயநாட்டில் மண்சரிவில் காணாமல் போனவர்களை தேடும் பணியில் தேசிய பேரிடர் மீட்பு படையினர் ஐந்தாவது நாளாக இன்றும் ஈடுபட்டு வருகின்றனர்.*

*Meenakshi ஆற்றில் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாக மாநில அமைச்சர் திரு. சித்திக் தெரிவித்துள்ளார்.*

*கடந்த 7ஆம் தேதி வயநாடு மாநிலம், Kalladi-யில் சுரங்கப்பாதை பணிகளின் போது, கனமழை காரணமாக ஏற்பட்ட மண்சரிவால் இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ளனர்.*

*>>>>>>><<<<<<<*

*□ம்மு ரயில்வே கோட்டத்திற்கு உட்பட்ட Banihal - Baramullah பகுதியில் பராமரிப்பு பணிகள் காரணமாக, ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.*

*வடக்கு ரயில்வே வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த வழித்தடத்தில் 3 ரயில்கள், வரும் 25ஆம் தேதி வரை ரத்து செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*ரயில் பயணிகளின் பாதுகாப்பிற்காக, இப்பகுதியில் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருவதாகவும் ரயில்வே கூறப்பட்டுள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*□ம்மு கஷ்மீரின் பல்வேறு பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

*Chenab பள்ளத்தாக்கு பகுதி மற்றும் Pir Panjal மலைப்பகுதிகளிலும் கனமழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*□ம்முவில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*பல்வேறு இடங்களில் கனமழை காரணமாக வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்படக்கூடிய அபாயம் உள்தாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*வெனிசுலாவில் கடந்த மாதம் 24ஆம் தேதி நேரிட்ட நிலநடுக்கத்தால், உயிரிழந்தோர் எண்ணிக்கை 4 ஆயிரத்தை கடந்துள்ளது.*

இதுதொடர்பாக அந்நாட்டு நாடாளுமன்ற தலைவர் *Jorge Rodriguez* வெளியிட்ட சமூகவலைதளப் பதிவில், இதுவரை 4 ஆயிரத்து 118 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 16 ஆயிரத்து 740 பேர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

காணாமல் போன ஆயிரக்கணக்கானோரை தேடும் பணி நடைபெற்று வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில், வெனிசுலாவில் நிவாரணப் பணிகளுக்காக 30 கோடி அமெரிக்க டாலர் நிதியை திரட்ட வேண்டும் என்று ஐ.நா கேட்டுக் கொண்டுள்ளது.

வெளிநாட்டு வங்கிகளில் முடக்கி வைக்கப்பட்ட வெனிசுலாவின் சொத்துக்களை நிவாரணப் பணிகளுக்காக விடுவிக்க வேண்டும் என்று அந்நாட்டு அதிபர் *Delcy Rodriguez* வலியுறுத்தியுள்ளார்.

>>>>>>><<<<<<<

மேற்காசியாவில் அமைதியை நிலைநாட்டுவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த கத்தார் பிரதிநிதிகள் குழு, ஈரான் தலைநகர் டெஹ்ரான் செல்லவுள்ளது.

இதுதொடர்பாக ஈரான் அரசு ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில், வளைகுடா பகுதியில் பிரச்சினைக்கு தீர்வு காண, கத்தார் மேற்கொள்ளும் முயற்சியின் ஒரு பகுதியாக, இந்த பயணம் மேற்கொள்ளப்படுகிறது.

*Hormuz* நீரிணையில் வர்த்தக கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதாக குற்றச்சாட்டு எழுந்து வரும் நிலையில், கத்தாரின் இந்தக் குழுவின் பயணம் முக்கியத்துவம் பெறுகிறது.

அமெரிக்காவின் ஆதரவுடன் இந்த பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளதாக தெரிகிறது.

>>>>>>><<<<<<<

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 5வது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

*Southampton*-ல் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்கிறது.

5 போட்டிகளைக் கொண்ட இத்தொடரை 3 போட்டிகளில் வெற்றிபெற்ற இங்கிலாந்து கைப்பற்றியுள்ளது.

>>>>>>><<<<<<<

உலக கோப்பை கால்பந்து போட்டியின் காலிறுதி ஆட்டங்களில் நாளை அதிகாலை மணி 2.30க்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் நார்வே - இங்கிலாந்து அணியையும், காலை மணி 6.30க்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் அர்ெ□ன்டினா - சுவிர்சர்லாந்து அணியையும் எதிர்கொள்கின்றன.

பிரான்ஸ் - ஸ்பெயின் அணிகள் ஏற்கனவெ அரையிறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளன.

>>>>>>><<<<<<<

லண்டனின் Lords-ல் நடைபெறும் இந்தியாவுக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய முதல்நாள் ஆட்டநேர இறுதியில் ஒரு விக்கெட் இழப்புக்கு 21 ரன் எடுத்தது.

இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 285 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இரண்டாவது நாள் ஆட்டம் இன்று பிற்பகல் மணி 3.30-க்கு தொடங்குகிறது.

>>>>>>><<<<<<<